89—

மாணவியர் விடுதி

***47575—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்சமயம் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி ஒன்றால் மட்டுமே ஒரு நாடு சமூக, பொருளாதார முன்னேற்றம் அடைய முடியும் என்பதற்கிணங்க, இன்று கல்வித் துறைக்கு மட்டும் 24,633.32 கோடி ரூபாயை அள்ளித் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் கல்லாமை இல்லாமை ஆக்கிட்ட தமிழகத்தினுடைய கல்வித் தாய், வாழும் மனித தெய்வம், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் நகராட்சியில், நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி சுமார் 2,000 மாணவியரைக்*

2015 மார்ச் 30]

கொண்டு இயங்கி வருகின்றது. இந்தப் பள்ளியில் ஆண்டுக்காண்டு தேர்ச்சி சதவிகிதம் 100 சதவிகிதத்தை எட்டுகின்ற அளவிற்கு கல்வியினுடைய தேர்ச்சி சதவிகிதம் இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், இங்கே ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர் கல்வி பயின்று வருகின்றார்கள். மேலும் கிராமப்புறங்களிலிருந்து அதிகமான அளவில் மாணவியர் இந்த நகராட்சிப் பள்ளியில் படித்து வருகின்ற காரணத்தினால், தொலைதூரத்திலிருந்து வரும் மாணவியர் அங்கே தங்கிப் படிப்பதற்கு ஏதுவாக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் நல விடுதியைக் கட்டிக்கொடுத்தால் எதிர்காலத்தில் அவர்களுடைய கல்வியை சிறப்பாக கற்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைக் கூறி, அதனை மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, அங்கே ஒரு மாணவியர் விடுதியைக் கட்டிக்கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலைப்பெற்று, ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

முற்பகல் 11–35

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட தென்பொன்முடி இ.ஏ.பி. அரசு உயர்நிலைப் பள்ளி தற்பொழுது மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. இந்தப் பள்ளி கிராமப்புறத்திலே அமைந்திருக்கின்றது. ஏறத்தாழ 5–6 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து மாணவர்கள் இங்கே வந்து படித்துச் செல்கின்றார்கள். ஆகவே, மாணவர்கள் விடுதி ஒன்றை அமைத்துக் கொடுத்தால் அந்த

மாணவர்கள் அங்கே தங்கி கல்வி பயில்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த இ.ஏ.பி. அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர் விடுதி ஒன்றைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

எனது மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், கடந்த *2001* முதல் *2006* ஆம் ஆண்டுவரை இருந்த அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், வெள்ளியங்காடு, புஜங்கனூர், சீலியூர், காரமடை, மேட்டுப்பாளையம் மற்றும் பெத்திக்குட்டை ஆகிய பகுதிகளிலே மாணவர் விடுதிகள் கட்டப்பட்டு, சிறப்பாக இயங்கி வருகின்றன. அங்கு மாணவர்களுடைய சேர்க்கை தொடர்ந்து பத்தாண்டு காலமாக முழுமையாக இருந்து வருகிறது. ஆகவே, பத்தாண்டுகளுக்கு மேலாக ஆகிவிட்ட காரணத்தாலே, மேற்கூறிய அந்தக் கட்டடங்களெல்லாம் சற்று பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. ஆகவே, அந்தக் கட்டடங்களைப் பழுதுநீக்கி புதுப்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறையின் மூலமாக ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *90*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

90—

தரம் உயர்த்துதல்

***8320—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—